2012 மே 10]

நம்முடைய தமிழ்நாட்டிலே கடல் அலைகளிலிருந்து மின்சாரம் தயாரிப்பதற்கான சாத்தியக் கூறுகள் இருப்பதாக வல்லுநர்கள் ஆய்வறிக்கைகளில் தெரிவிக்கின்றார்கள். அந்த அடிப்படையில் நம்முடைய தமிழ்நாட்டைச் சுற்றி கடல் பகுதி மிகப் பெரும்பான்மையாக இருக்கின்ற காரணத்தால், கடல் அலைகளிலிருந்து மின்சாரம் தயாரிக்கின்ற திட்டம் தமிழக அரசின் செயற்குறிப்பில் இருக்கிறதா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலுக்குள் அமைக்கப்படும் காற்றாலைமூலம் மின் உற்பத்தி செய்யப்படுகின்ற மின் திட்டம் தற்போது ஆய்வில் இருக்கிறது. ஆனால், கடல் அலைகளிலிருந்து மின்சாரம் தயாரிப்பதற்கான கருத்துருவை, ஆலோசனைகளை இப்பொழுது பல்வேறு நாடுகளிலிருந்து வல்லுநர்கள் வழங்கி இருக்கிறார்கள். சில பேர் அதற்கு முன்வந்துள்ளதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆய்வுகளை மேற்கொண்டு கடல் அலைகளிலிருந்தும் மின்சாரம் தயாரிப்பதற்கான சாத்தியக் கூறுகள் இருக்குமானால், அதையும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 245, மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.டி. வெங்கடாச்சலம், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

245—

பாதாளச் சாக்கடைத் திட்டம்

***2055—திரு. என்.டி. வெங்கடாச்சலம்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெருந்துறை தொகுதி, ஊத்துக்குளி பேரூராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டம் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2012 மே 10

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு திருத்திய விடையை பேரவைக்குச் சமர்ப்பிக்கின்றேன்.*

திருப்பூர் மாவட்டம், ஊத்துக்குளி பேரூராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டம் தொடர்பான ஆய்வுப் பணிகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினால் மேற்கொள்ளப்பட்டு, தற்போது 26 கோடியே 64 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் விரிவான திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. வரும் நிதியாண்டுகளில் இத்திட்டம் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.டி. வெங்கடாச்சலம் அவர்கள்.*

திரு. என்.டி. வெங்கடாச்சலம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் மாவட்டம், பெருந்துறை தொகுதியைச் சேர்ந்த ஊத்துக்குளி பகுதிக்கு ஒரு தனிச் சிறப்பு உண்டு.* Cream separator *என்று சொல்லக்கூடிய, பச்சைப் பாலிலே இருந்து வெண்ணெய் உற்பத்தி செய்யக்கூடிய ஒரே இடம் தமிழ்நாட்டிலேயே ஊத்துக்குளி பகுதி. அதிலிருந்து வெளியேறக்கூடிய கழிவுகள் சுகாதாரக்கேட்டை ஏற்படுத்தக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கின்றது. சுதந்திரம் பெற்ற நாளிலிருந்து ஊத்துக்குளி பகுதி ஒரு வறட்சியான பகுதி. குடிநீர்ப் பற்றாக்குறை நிறைந்து இருக்கின்ற பகுதி. அந்தப் பகுதிக்கு பெரியகொடிவேரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலமாகவும், திருப்பூர் புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலமாகவும், ஆற்று நீரைக் கொண்டு வந்து மக்களின் தாகத்தைப் போக்கியவர் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.*

முற்பகல் 10-35

பனியன் தொழிற்சாலைகள் அதிகமாக நிறைந்திருக்கக்கூடிய திருப்பூர் நகருக்கு அருகாமையிலே, மிக அருகாமையிலே இருக்கின்ற பகுதி ஊத்துக்குளி பகுதியாக இருக்கின்ற காரணத்தினாலே, திருப்பூரிலே இன்றைக்கு Cost of living *அதிகமாக இருக்கின்ற காரணத்தினாலேயும்,* Floating Population *இந்த ஊத்துக்குளி பகுதியிலே அதிகமாகிவிட்ட காரணத்தினாலேயும்,*

2012 மே 10]

இந்தப் பகுதியிலே இருக்கின்ற கழிவுநீரை முழுமையாக வெளியேற்றுவதற்கு பூகோள அமைப்பின்படி அந்தப் பகுதி சரியாக அமையாத காரணத்தினாலே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவினுடைய பொற்கால ஆட்சியில் தொடர்ந்து அனைத்துப் பகுதிகளுக்கும் பாதாளச் சாக்கடைத் திட்டம் அமைந்தாலும்கூட, இந்த ஊத்துக்குளி பகுதிக்கு முன்னுரிமை கொடுத்து, உடனடியாக அதை வழங்கக் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, பெருந்துறை தொகுதியில் இருக்கின்ற கருமாண்டிசிலிபாளையம் பேரூராட்சியும், இங்கே நான் சொன்ன கருத்துகளை உள்ளடக்கி இருக்கின்ற காரணத்தினாலே இந்த இரண்டு பேரூராட்சிகளுக்கும் முன்னுரிமை அடிப்படையிலே இந்த ஆண்டே பாதாளச் சாக்கடைத் திட்டத்தை வழங்க மாண்புமிகு அம்மாவினுடைய அரசு பரிசீலிக்குமா என மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவருடைய சொந்தத் தொகுதியிலே இருக்கின்ற தேவைகளை உடனடியாக நிறைவேற்றவேண்டுமென்று இங்கு கோரிக்கை வைத்திருக்கின்றார். ஆனால், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த நிதியாண்டில் புதிய அறிவிப்புகளாக ஏற்கெனவே 28 பேரூராட்சிகளுக்கு அறிவிக்கப்பட்டு, அதற்காக 755.98 கோடி ரூபாய் நிதியாதாரத்தை உருவாக்கிக் கொடுத்திருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே வைத்திருக்கின்ற கோரிக்கை ஊத்துக்குளிக்கானது. ஊத்துக்குளியினுடைய பூளோக அமைப்பைப் பற்றியே இங்கே எடுத்துவைத்துவிட்டார். அவ்வளவு ஆர்வமாக இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினருடைய உணர்வுகளை மதித்து, வரும் நிதியாண்டுகளில் நிச்சயமாக இந்தப் பணி மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.டி. வெங்கடாச்சலம் அவர்கள்.*

திரு. என்.டி. வெங்கடாச்சலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவினுடைய நல்லாசியோடு இந்தத் திட்டம் செயல்படுத்தப்படும் என்று அறிவித்திருக்கின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) அடுத்த நிதியாண்டிலே இருந்தாலும்கூட அதற்கும் இந்த நேரத்திலே மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி பாராட்டி அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.

திரு. க. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த தி.மு.க. ஆட்சியில் சிதம்பரம் நகராட்சிக்கு பாதாளச் சாக்கடைத் திட்டத்திற்கான மதிப்பீடுகளெல்லாம் தயாரிக்கப்பட்டு, அரசாணை வெளியிடப்பட்டு, கடைசியிலே அதை இரத்து செய்து விட்டார்கள். இப்போது இந்த அரசின் சார்பில் 53 கோடி ரூபாயிலே புதிய மதிப்பீடு தயார் செய்யப்பட்டிருக்கிறது. இந்த நிதியாண்டிலே அந்தத் திட்டத்தை நிறைவேற்ற அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு மூத்த உறுப்பினர். ஏற்கெனவே அறிவிப்பில் இதுகுறித்து அறிவிக்கப்பட்டிருக்கிறது. சிதம்பரம் நகராட்சி குறித்த புதிய அறிவிப்புகளை இங்கே சொல்லுகிறேன். புதிதாக 22 நகராட்சிகளில் பாதாளச் சாக்கடைத் திட்டங்களுக்காக 2,355 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இந்த நிதியாண்டில் பணிகள் நடைபெறும் என்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். போடிநாயக்கனூர், சிதம்பரம், ஓசூர், மேட்டூர், குமாரபாளையம், இராசிபுரம், பெரியகுளம், காரைக்குடி, இராமேஸ்வரம், கொடைக்கானல், பழனி, சத்தியமங்கலம், பவானி, பொள்ளாச்சி, பெரம்பலூர், அரியலூர், சாத்தூர், நாகர்கோவில், திருப்பத்தூர், அரக்கோணம், ஜோலார்பேட்டை மற்றும்

2012 மே 10]

திருச்சிராப்பள்ளி கார்ப்பரேஷன் உட்பட்ட பகுதிகள் அவை. எனவே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த நிதியாண்டில் அறிவித்துள்ள புதிய அறிவிப்புகளில் மாண்புமிகு உறுப்பினருடைய தொகுதிக்குட்பட்ட சிதம்பரம் நகராட்சியும் சேர்க்கப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். இதற்காக இந்த நிதியாண்டில் மட்டும் 22 நகராட்சிகளுக்கு 2,355 கோடி ரூபாய் நிதியாதாரத்தை உருவாக்கிக் கொடுத்திருக்கிறார்கள் என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறை சட்டப் பேரவைத் தொகுதிக்குட்பட்ட ஆனைமலை ஒன்றியத்தில், கோட்டூர் பேரூராட்சி மற்றும் ஆனைமலை பேரூராட்சிகளில் பாதாளச் சாக்கடைத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கோரியுள்ள அந்தப் பேரூராட்சிகளுக்கு விரிவான திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது. வரும் நிதியாண்டுகளில் நிதியாதாரத்திற்கேற்ப முன்னுரிமை அடிப்படையிலே அவை எடுத்துக்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன் அவர்கள்.

முற்பகல் 10-40

திரு. என்.ஆர். ரெங்கராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கூட்டத் தொடரில் ஆயிரம் துணைக் கேள்விகளைக் கேட்க அனுமதித்த தங்களுக்கு எங்களுடைய

[2012 மே 10

பாராட்டுகளைத் தெரிவித்துக்கொண்டு, இன்னும் ஒரு வார காலத்திலே சட்டமன்றக் கூட்டத் தொடர் முடியக்கூடிய இந்த நேரத்திலே, ஒன்றரை மாத காலமாக எங்களை அன்போடு அரவணைத்து நல்ல முறையில் அவையை நடத்திய தங்களுக்கு எங்களுடைய பாராட்டுகளை மீண்டும் ஒரு முறை தெரிவித்துக்கொண்டு, கடந்த ஆட்சியின்போது பட்டுக்கோட்டை நகராட்சியிலே பாதாளச் சாக்கடைத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காகத் திட்டமிட்டிருந்தார்கள். ஆனால் அது நிறைவேற்றப்படவில்லை. இந்த வருடமும் அறிவிக்கப்படவில்லை. எனவே, வரும் நிதியாண்டிலாவது பட்டுக்கோட்டை நகராட்சியிலே பாதாளச் சாக்கடைத் திட்டத்தை நிறைவேற்ற அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே கடந்த ஆட்சியில் பட்டுக்கோட்டை நகராட்சிக்கு பாதாளச் சாக்கடைத் திட்டம் வரும் என்று அறிவித்து, அது கைவிடப்பட்டது என்று கூறியிருக்கின்றார்கள். அதிலே இரண்டு கருத்துகள் இருக்கின்றன. ஒன்று, அதற்குரிய இடம்—சுத்திகரிப்பதற்குத் தேவையான நிலம் ஆர்ஜிதப்படுத்தப்படவில்லையென்று சொல்லி அதைத் தள்ளுபடி செய்திருக்கின்றார்கள். இரண்டு, அதற்குரிய நிதி ஆதாரங்களை கடந்த ஆட்சியிலே செய்யவில்லை. மத்திய அரசினுடைய சிறு மற்றும் நடுத்தர உள் கட்டமைப்புத் திட்டத்தின் வாயிலாக நிதி ஒதுக்கீடு பெற மத்திய அரசைக் கடந்த ஆட்சியினர் கேட்டனர். அதை மத்திய அரசு கொடுக்காத காரணத்தினால்தான் கிட்டத்திட்ட 35 நகராட்சிகளுக்கு அரசாணை வழங்கப்பட்ட பின்னரும்கூட அந்தப் பணி மேற்கொள்ளப்படாமல் கைவிடப்பட்டிருக்கின்றது. ஆனால், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மைய அரசை நம்பாமல், மாநில அரசினுடைய நிதி ஆதாரத்தை வைத்தே அனைத்து நகராட்சிகளையும், 125 நகராட்சிகளையும் மேம்படுத்த வேண்டுமென்ற ஒரு செயல்திட்டத்தோடு (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நிதியாண்டில் 22 நகராட்சிகளை எடுத்துக்கொண்டிருக்கின்றார்கள். அந்த 22 நகராட்சிகளுக்கு இந்த நிதியாண்டில் மட்டும் 2,355 கோடி ரூபாயை

2012 மே 10]

ஒதுக்கியிருக்கின்றார்கள். மாநில அரசே அந்த நிதி ஆதாரத்தை உருவாக்க வேண்டும். இதற்கு ஒரு பைசா கூட மத்திய அரசு கொடுப்பது இல்லை. இப்படி இவ்வளவு பெரிய தொகையைக் கொடுக்கின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நிச்சயமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையைப் பரிவோடு பரிசீலனை செய்து நிறைவேற்றித் தருவார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.கே. போஸ் அவர்கள்.

திரு. ஏ.கே. போஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை வடக்குத் தொகுதிக்கு உள்ளடக்கிய மேலமடை பகுதி ஊராட்சியாக இருந்த காரணத்தினால், அங்கே பாதாளச் சாக்கடைத் திட்டம் அமைக்கப்படாமல் அப்படியே இருக்கிறது. அது மாநகராட்சியில் சேர்க்கப்பட்டதன் காரணமாக, மேலமடை பகுதி மாநகராட்சிக்குச் சொந்தமானது என்று அவர்கள் விட்டுவிட்டார்கள், மேலமடை, ஊராட்சிக்குச் சொந்தமானது என்று மாநகராட்சியானது விட்டுவிட்டது. ஆகவே, அங்கு சாக்கடை நீர் நிறைய போய்க்கொண்டிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதைப் பரிசீலனை செய்து, அங்கே பாதாளச் சாக்கடை அமைக்கும் திட்டத்தை நிறைவேற்றித் தருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.கே. போஸ் அவர்கள் தங்கள் அனுமதியோடு கேட்டுக்கொண்டிருக்கின்றார்கள். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சுந்தர்ராஜன் அவர்கள், சைகையிலே கோரிக்கை வைத்துக்கொண்டிருக்கின்றார். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சைகையிலே கோரிக்கை வைத்தாலும் சரி, நேரடியாகக் கோரிக்கை வைத்தாலும் சரி, அந்த மாநகராட்சி சிறப்புடன் செயலாற்றுவதற்காகத்தான் இந்த நிதியாண்டில் சிறப்பு நிதியாக 250 கோடி ரூபாயை மதுரை

மாநகராட்சிக்கு மட்டும் ஒதுக்கி இருக்கின்றார்கள். நிச்சயமாக அந்த நிதி ஆதாரத்தை (மேசையைத் தட்டும் ஒலி) வைத்துக்கொண்டு, அந்தப் பகுதி முழுவதையும் தூய்மைப்படுத்துவதோடு பாதாளச் சாக்கடைத் திட்டமும் நிறைவேற்றப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பார்த்திபன் அவர்கள்.*

திரு. எஸ்.ஆர். பார்த்திபன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டூர் சட்டமன்றத் தொகுதி, மேட்டூர் நகராட்சிக்கு பாதாளச் சாக்கடைத் திட்டம் இந்த நிதியாண்டில் அமல்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அதேபோல, மேட்டூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, கொளத்தூர் பேரூராட்சி, மேச்சேரி பேரூராட்சி, பி.என்.பட்டி பேரூராட்சி, வீரக்கல் பேரூராட்சி போன்ற பேரூராட்சிப் பகுதிகளுக்கும் பாதாளச் சாக்கடைத் திட்டம் அமல்படுத்தப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டூர் தொகுதியில், மேட்டூர் நகராட்சிக்கு கிட்டத்தட்ட 100 கோடி ரூபாய்க்குமேல் தேவைப்படும். சரியான விவரம் தற்போது என்னிடம் இல்லை. அந்த நகராட்சியானது இந்த நிதியாண்டில் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய மற்ற பேரூராட்சிகள் வரும் நிதியாண்டுகளில் ஒன்றன்பின் ஒன்றாக நிச்சயமாக எடுத்துக்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 246, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுரேஷ்குமார், மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*